# community
The New Apostolic Church around the world

01/2015/Tamil



## 2015ல் நமது குறிக்கோள்:
# கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சி

பகுத்தறிதல், மாறுதல், புதிதாகுதல்:
தேவாராதனை - லக்சன்பர்க்

போதனாவிளக்கநூல் வினாவிடை வடிவத்தில்

உலகளாவிய சபையின்மேல் முழுப்பார்வை
சபையின் ஊடகக் கண்ணோட்டம்

புதிய அப்போஸ்தல சபை

# நெருங்கி ஒன்றாய் செயற்படுவோம்


NAK International

உலகெங்கும் வாழும் அன்பு சகோதர சகோதரிகளே,

புதிய அப்போஸ்தல சபை அங்கத்தவர்களின் புதிய சர்வதேச சஞ்சிகையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். ''கொம்யூனிட்டி'' சஞ்சிகையின் முதல்பதிப்பை இப்பொழுது நீங்கள் வாசிக்கிறீர்கள். இதுமுதல், மூன்று மாதங்களுக்கு ஒருதடவை வெளிவரும் இச்சஞ்சிகை சபையின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அச்சுப்பதிப்பிலும் மின்பதிப்பிலும் கிடைக்கிறது. .

புதிய சஞ்சிகை ''கொம்யூனிட்டி''

- தகவல்தொடர்பு. தேவாராதனைகள்,உபதேச காரியங்கள், நிகழ்கால சம்பவங்கள் மற்றும் சபையின் அபிவிருத்தி பற்றிய தகவல்கள் முடிந்த அளவுக்கு உங்களுக்கு கிடைக்கும்வண்ணம் அங்கத்தவர்களுக்கான புதிய சஞ்சிகை உதவும்.
- ஒற்றுமை. ஒரே விசுவாசமும் ஒரே இலக்கும் நமக்குண்டு. ஆதலால், தேவாராதனைகளில் நாம் கேட்கிற உபதேசமும், நமது அன்றாட வாழ்வில் நாம் கடைப்பிடிக்கும் உபதேசத்துக்குரியவையும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருத்தல் பிரதானமானதாய் காணப்படவேண்டும்.
- Community. சமுதாய கலாச்சார பின்னணியில் பல வித்தியாசங்களைக் கொண்டிருக்கும் ஒரு சர்வதேச சமூகமாய் நாம் இருக்கிறோம். உலகின் வித்தியாசமான பல்வேறு சபைக்கூட்டங்களின் நடப்புகளின் அறிக்கைகள்மூலம் ஒருவரையொருவர் சிறப்பாய் அறிந்துகொள்ளக்கூடிய சாத்தியத்தை நாம் பெறுகிறோம். நமது சர்வதேச சபை நெருங்கி ஒன்றாய் செயற்படுவதை இது குறிக்கோளாய் கொண்டிருக்கிறது.

''எங்கள் குடும்பம்'' சஞ்சிகையை உங்களில் சிலர் இழக்கக்கூடும். ஆயினும், இப்புதிய மார்க்கத்தில் மிக அதிகமான அங்கத்தவர்களை நாம் தொடர்புகொள்ளமுடியும் என்று திடமனதாய் நம்புகிறோம். இக்காரணத்தினால் 2013 ஒக்டோபர் கனடாவில் நடந்த மாவட்ட அப்போஸ்தலர் கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டது. nac.today என்னும் ஆன்லைன் நாளிதழிலும் சபையின் செய்திகளை நீங்கள் தினசரி அறிந்துகொள்ளலாம்.

நமது 2015 குறிக்கோளான கிறிஸ்துவில் மகிழ்ச்சி இப்புதிய முயற்சியினால் வலிமையடைவதாக. நமது இலக்கை நோக்கி சற்று நெருங்கிச் செல்வதற்கு உதவுவதாக. புதுவருடம் வெற்றியாய் ஆரம்பித்தது என நம்புகிறேன். இன்னும் அது புதுவருடமாய் தோன்றாவிடினும்கூட! மிகுந்த மகிழ்ச்சியும், இயேசுவின் சிந்தையில் வளர்ச்சியும், உன்னத மானவரின் ஆசீர்வாதமும் வருகிற மாதங்களில் உங்களுக்குக் கிடைக்க வாழ்த்துகிறேன்.

உங்கள் உண்மையுள்ள,



ஜோன்-லூக் ஷ்னைடர்

# பகுத்தறிதல், மாறுதல், புதிதாகுதல்



Marcel Felde



லக்சம்பர்க் நகரில் தேவாராதனை 11 ஜனவரி 2015

ரோமர் 12:2

“நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு
ஒத்த வேஷந்தரியாமல்,
தேவனுடைய நன்மையும் பிரியமும்
பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று
பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம்
புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.”

அன்பு சகோதர சகோதரிகளே, மதிப்புக்குரிய விருந்தி னர்களே, எனது சகோதர சகோதரிகளுடன் இங்கு லக்சம்பர்க் நகரில் கூடிவந்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒன்றிணைந்து ஒரு புது வருடத்தில் பிரவேசிக்கிறோம். இவ்வருடத்தை கிறிஸ்துவுக்குள் மகிழும் வருடமாய் நாம் பிரகடனப்படுத்தியிருக்கிறோம். "மகிழ்ச்சி வருடத்தை எந்த வழியில் நாம் தொடங்கு கிறோம்! உலகில் சம்பவிக்கிறவற்றை நீங்கள் கவனிக்க வில்லையா?" என்ற கேள்வியை ஏற்கனவே பலர் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். இருப்பினும், இக்குறிக் கோளில் உறுதியாயிருப் போம். இவ்வருடம் நாம் கிறிஸ்துவுக்குள் மகிழ்ந்தி ருப்பதற்கு நமக்கு ஒரு நல்ல காரணமுண்டு. நாம் சந்தோஷப்படும்படியாக நமக்கு அழகான நல்ல வரங்களை தேவன் வழங் குவார். நமக்கு முன்னால் சிரமம் நிரம்பிய நாட்கள் வருவதாயிருப்பினும்கூட, அதை நாம் சமாளிக்க வேண்டியவர்களாகிறோம். கஷ்டமான நாட்கள் ஒவ்வொ ருவருக்குமே நேரிடுகின்றன. இவ்வருடத்திலும் அது விதிவிலக்காயிருக்கப்போவதில்லை. ஆயினும், நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கு இன்னமும் காரணங்கள் உண்டு. ஆடிப்பாடி குதுகலிப்பதை இது குறிப்பதில்லை; ஆனால், கர்த்தர் நமக்கு மிகவும் சமீபமாயிருக்கிறார் என்பதை நாம் உணர்வதால் களிகூருகிறோம். அதிலும் குறிப்பாக நம் சோதனைகளில்! "கர்த்தர் இதோ இருக்கிறார் என்று உணருதல் மிகச் சிறந்த மகிழ்ச்சியாகும்.

நல்ல நாட்களிலும் அல்லது நன்மையற்ற நாட்களிலும் சந்தோஷப்பட குறிப்பிட்ட ஒரு காரணம் நமக்குண்டு. இயேசுதாமே குறிப்பிட்டார்: "ஆகிலும், ஆவிகள் உங்க ளுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" (லூக். 10:20). பரலோகராஜ்யத்தைக் குறித்து சிறுபிள்ளைகளோடு நேற்று பேசிக்கொண்டோம். அது ஒரு அழகிய உரையாடல். "உங்கள் நாமங்கள் பரலோ கத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" இதன் அர்த்தம் என்ன? அதாவது, நாம் பரலோகத்தில் தேவனோடு ஐக்கியத்தில் பிரவேசிக்கும்படிக்கு கர்த்தர் நமக்காக மரித்தார். நமக்கு முன்பாக கர்த்தர் அங்கு பிரவேசித்திருக்கிறார். " என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:2-3).

பிள்ளைகளிடம் நான் விவரித்தேன். ஒரு விழா ஆராத னைக்குப் போகிறீர்கள் என்று எண்ணிக்கொள்வோம். ஒரு ஆசனத்தை உங்களுக்கு பிடித்துவைக்கும்படி உங்கள் நண்பரிடம் கூறுகிறீர்கள். அவர் உங்களுக்காக ஒரு ஆசனத்தை கீதப்புத்தகத்தையோ அல்லது கைப்பையையோ வைத்து பிடித்துவைப்பார். எனவே மற்றவர்கள் அதில் அமரமாட்டார்கள். இயேசுவும் நமக்கு ஒரு இடத்தைப் பிடித்துவைப்பதற்காக பிதாவிடம் சென்றார். நமக்கு அவர் தேவனோடு ஐக்கியத்தில் இடம் ஒதுக்கியிருப்பதனால் நமது நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. இது நம் சந் தோஷத்திற்குக் காரணமாகிறது.

"நமக்கு அவர் தேவனோடு ஐக்கியத்தில் இடம் ஒதுக்கியிருப்பதனால் நமது நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன."

பவுல் ரோமருக்கு எழுதிய நம் வேதவாக்கியம் பிரபல்யமானது. "இந்த பிரபஞ் சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." பிரபஞ்சம் எனக் கூறப்படுவதில் தீமையானவற்றை நாம் உடனே சிந்திக்கக்கூடும். அர்த்தம் அதுவல்ல. காலத்தின் ஆவியை வசனம் அர்த்தப் படுத்துகிறது. ஒருபோதும் மாறாத, மாறவேண்டியவரல்லாத தேவனை பவுல் அறிவிக்கிறார். ஏனெனில் அவர் பரிபூரண மானவர். மாறவேண்டும் என்று அவரை எதனாலும் நிரப்பந் திக்கமுடியாது. பூமியின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவர் மாறு வதில்லை. "நான் கர்த்தர் நான் மாறாதவர்" (மல்கியா 3:6).

மறுபக்கம் காலங்களின் ஆவி. மனித இனத்தில் தொடர்ச்சி யாக நடந்துவரும் மாற்றங்கள்! ஒரு புதிய தத்தவத்தை இங்கு கொண்டுவர நான் விரும்பவில்லை. ஆனால் இரண்டை இங்கு குறிப்பிடுவேன். தேவனுடன் உள்ள உறவு, அயலாரு டன் உள்ள உறவு. யாவும் நன்மையாய் நடக்கிறபொழுது மனிதர் அரிதாகவே தேவனை நாடுகிறார்கள். ஆனால் கஷ்டங்கள் வரும்பொழுது "தேவனே உதவிசெய்யும்" என கதறுகிறார்கள். உலகில் மனிதர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் உறவுகளும் இங்கு குறிப்பிடத்தக்கவை. முன்பு நல்லவரும் நட்பானவருமாய் காணப்படுகிறவர், திடீரென விரோதியென காணப்படுகிறார். ஒவ்வொன்றும் தொடர்ச்சியாய் மாற்றமடைகிறது. உலகில் சம்பவிக்கி றவை தேவனோடு நமக்குள்ள உறவிலும், நம் அபிப்பிரா யங்களிலும், அயலாரிடம் உள்ள உறவிலும், சத்தியத்துடன் உள்ள உறவிலும் தாக்கத்தைக் கொண்டுவருகின்றன. இதை நாம் காண்கிறபொழுது பவுலை சிறப்பாய் விளங்கிக்கொள் கிறோம். "இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதா கிறதினாலே மறுரூபமாகுங்கள்." தேவனிடம் சிந்தையாயி ருக்கும்படி பவுல் புத்திகூறுகிறார். அதாவது, காலத்தின் ஆவி நம்மை ஆட்கொள்வதற்கு இடமளிக்கக்கூடாது. சகோ தர சகோதரிகளே எது நேரிடினும் தேவனோடு நமக்குள்ள உறவு மாறாததாய் இருக்கவேண்டும். அயலாரிடம் நமது உறவும் உலகில் சம்பவிக்கிறவைகளின் அடிப்படையில் மாறக்கூடாது. நமது முழு நோக்கமும் சர்வவல்லவரும், அவர் விரும்புவதும் அவர் சொல்வதுமாய் இருக்கவேண்டும்!



ஜெர்மனியைச் சேர்ந்த
அப்போஸ்தலர் ஜென்ஸ் லிண்டமான்
பிரசங்கிக்கிறார்

அவருடைய சத்தியமே நமது சத்தியம். பெரும்பான்மையின் தாக்கத்துக்கு நாம் இடமளிக்கமாட்டோம். முழு உலகமும் வித்தியாசமான நோக்கைக் கொண்டிருந்தாலும், நாம் உறுதியாயிருப்போம். "நமது நோக்கம் தேவனே; அவரது சித்தமோ மாறவிடவில்லை! அவருடைய பிரமாணமும் மாறிவிடவில்லை! எனவே, உலகை நாம் பற்றுவதில்லை!" நாம் ஒரு சிறுமந்தையாயிருந்தாலும்கூட, கிறிஸ்தவர்களாக, விசுவாசிக்கும் ஜனங்களாக நாம் தேவனையே நோக்கமாய் கொண்டிருக்கிறோம். தேவனுடனும் அயலாருடனும் நமக்குள்ள உறவு உலகில் சம்பவிக்கிறவற்றினால் பாதிப்படையலாகாது. எல்லாரும் செய்கிறதைப்போல எல்லாரும் சிந்திக்கிறதைப்போல என்று நம்மால் கூறிவிடமுடியாது. நன்மை இன்னதென்று நாம் பகுத்தறியவேண்டும் என்று பவுல் கூறுகிறார். இது நம்மைப் பொறுத்தது. ஒவ்வொருவரும் வித்தியாசமானதை செய்கிறார்களே என்று நம்மால் விவா திக்கமுடியாது. தேவனுடனும் அயலாருடனும் உள்ள நல்லுறவுக்கு ஒவ்வொருவரும் பொறுப்பாகிறார். தேவனுடைய சித்தத்தோடு ஒத்துவருகிறதா என்று எதையும் பகுத்தறிதல் நம் தனிப்பட்ட கடமையாகும்.

"தேவனுடைய நன்மையும்... சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக..." மோசேயிடம் வழங்கிய தேவனுடைய பிரமாணமும், கட்டளைகளும் மேன்மையானவை என்று பவுல் கூறினார் (ரோமர் 7:12). உலகம் தலைகீழாய் ஆனாலும் நமது நோக்கம் தேவனே. மோசேயிடம் தரப்பட்ட தேவனின் பிரமாணமாகிய கட்டளைகளை நாம் பற்றிக்கொள்வோம். அதில் எதுவும் பெறுமதியிழக்கவில்லை. அதன் ஒரு பாகமாய் அன்பின் கட்டளை விளங்குகிறது. "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" (லேவியராகமம் 19:18). இதையே நாம் கவனிக்கிறோம். பிறனிடம் அன்புகூருதலை இயேசு தெளிவாய் விளக்கிக் கூறினார். "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." (மத்தேயு 7:12). இது எளிதானது. இது எல்லா காலத்துக்கும் சூழ்நிலைக்கும், 2015ல் இன்றும் முழு உலகுக்கும் ஏற்றது. இன்னமும் இதை நாம் கடைப்பிடிக்கிறோமா என்பதை இடைவிடாமல் நமக்குள் ஆராய்ந்துகொள்வோம். தேவனுடைய பிரமாணமும், பத்து கட்டளைகளும், தேவனிடமும் அயலாரிடமும் அன்புகூருதலும் நன்மையானவை.

"நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ள நம் அயலாரைத் துன்பப்படுத்துவோமெனில் அது கர்த்தருக்குப் பிரியமாயிருப்பதில்லை "

பவுல் கூறினார்: "தேவனுடைய பிரியமும்... இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக..." அதாவது, தேவனைப் பிரியப்படுத்துகிறவை எவை என்று நாம் சிந்திக்கவேண்டும். இயேசு எதிர்பார்ப்பதையே தாங்கள் செய்வதாக தடவைகளில் சீஷர்கள் கருதினார்கள். ஆனால் அது அவ்வாறு இருக்கவில்லை. அவர்கள் செய்யவேண்டியதை கர்த்தர் கூறினார். அதன்பின் சீஷர்கள் புரிந்துகொண்டார்கள். பிரமாணத்தை நிறைவேற்றலும், சுவிசேஷத்தை அறிவித்து அதைக் காத்துக்கொள்ளுதலும் அவர்களுக்குரிய கடமையாய் இருந்தது. இவையாவும் பரிபூரண தெளிவாய் அவர்களுக்கு விளங்கியது. ஆயினும், அவர்கள் எப்பொழுதும் சரியான இடத்தை இதற்கு தரவில்லை. கர்த்தரை காக்கவேண்டுமென பேதுரு அறிந்திருந்தான். இயேசுவைப் பிடிக்கவந்த பிரதான ஆசாரியனின் சேவகனை பட்டயத்தினால் காதற வெட்டினான். அது கர்த்தருக்குப் பிரியமாயிருக்கவில்லை. இதிலிருந்து நாம் எந்த முடிவுக்கு வருகிறோம்? நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ள





மேலே:
பாடகர் குழுவினர்

இடது:
அப்போஸ்தலர் ரூடோல்ஃப் காய்ன்ஸ்
பிரசங்கிக்கிறார்

நம் அயலாரைத் துன்பப்படுத்துவோமெனில் அது கர்த்தருக்குப் பிரியமாயிருப்பதில்லை. இன்றைய சமுதாயத்தில் சொல்லிப் புரியவைக்கமுடியாத ஒரு காரியம் இது. இந்நடத்தை தேவனுக்குப் பிரியமற்றது. இது நமக்கும் உரியது.

மற்றோர் சந்தர்ப்பத்தில் இயேசுவிடம் வந்து யோவான் கூறினான்: "போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக்கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால் அவனைத் தடுத்தோம்" (மாற்கு 9:38). சீஷனாயில்லாத ஒருவன் பிசாசுகளைத் துரத்தியதை யோவான் தடுத்திருந்தான். கர்த்தர் அவனிடம் கூறினார்: "அவனைத் தடுக்கவேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" (மாற்கு 9:39-40). இயேசுவின் இப்பதில் யோவானுக்கு அதிர்ச்சி அளித்திருக்கும் என்று நான் நிச்சயமாய் கருதுகிறேன். யோவான் தன் செயலுக்கு பாராட்டை நாடியிருந்திருப்பான். ஆனால் கர்த்தரோ காரியங்களை வித்தியாசமாய் பார்த்தார். இச்சம்பவத்தை நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. கர்த்தரை விசுவாசித்துப் பின்பற்றாவிடினும்கூட அந்த மனிதன் தனது

சகமனிதருக்கு நன்மை செய்வதை நாடினான். பிசாசுகளைத் துரத்தினான். அதாவது அற்புதங்கள் செய்தான். பிறருக்கு நன்மை செய்வதற்காக அந்த மனிதனை தேவன் ஒரு கருவியாய் பயன்படுத்தினார். அவன் இயேசுவுக்கு சீஷனாயிருக்கவில்லை.

அன்பின் சகோதர சகோதரிகளே, இப்பூமியில் அநேகர் இயேசு கிறிஸ்துவில் நமக்குள்ள விசுவாசத்தைச் சேர்ந்தவர்களல்ல. இருப்பினும் பிறருக்கு உதவுவதிலும் தேவனைச் சேவிப்பதிலும் முயற்சியாயிருக்கிறார்கள். அவர்களை நாம் மதிக்காமல் ஏளனஞ்செய்கிறவர்களாய் அவர்களைத் தாக்குவோமெனில் தேவனைப் பிரியப்படுத்தாதவர்களாய் மாறுவோம்.

இது என் தனிப்பட்ட கருத்தல்ல, கர்த்தர் இயேசுவின் வசனத்தை இது ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது. இவ்வாறு பிறரை மதித்தல் நம் விசுவாசத்தைக் குறைப்பதாய் மாறாது. கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கிறோம். நம் இரட்சிப்பிற்கு அவர் செதுக்கிய வழியில் செல்கிறோம். அவரது மறுவருகையையும், அப்போஸ்தல ஊழியத்தையும் விசுவாசிக்கிறோம்.



வலது:
தலைமை அப்போஸ்தலர் ஜோன் - லூக் ஷ்ன்டர் அங்கத்தவர்களுடன்

கீழே:
தேவாராதனையில் பாடும் பாடகர் குழுவினர்



ஆயினும் பிறரை நிந்திப்பதற்கான எந்த காரணமும் நமக்குக் கிடையாது. பிறர்மூலமாகவும் தேவன் கிரியைசெய்யமுடியும் என்பதை அறிவோம். அப்படிப்பட்டவர்களை தேவன் ஆசீர்வதிக்கிறார். அவர்களை நாம் மதிப்பது தேவனைப் பிரியப்படுத்துவதாயிருக்கும்.

"ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று" (லூக்கா 9:54), சமாரியருடைய கிராமத்தவரைக் குறித்து யாக்கோபும் யோவானும் கர்த்தரிடம் கேட்டார்கள். இயேசுவோ அவர்களை அதட்டினார். தம்மை ஏற்றுக்கொள்ளும்படி ஜனங்களை நிர்ப்பந்திப்பதை அவர் விரும்பவில்லை. நாமோ தேவனையும் பிறரையும் அன்புகூரவேண்டும். சரியான முன்னிலையை நாம் கொண்டிருக்கவேண்டும். பிறரோடு நமக்குள்ள நல்லுறவில் தேவனோடு நமக்குள்ள உறவு தங்கியிருக்கிறது என்பதை கர்த்தர் எடுத்துரைத்தார். இரண்டும் இணைபிரியாதவை. அவர்தாமே கூறினார்: "ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில்,அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத்தேயு 5:23-24). பிறரை நிந்திக்கிற அதேவேளையில தேவனை நம்மால் சேவிக்கமுடியாது என்பதை இது காட்டுகிறது. தேவனிடம் அன்புகூருதலும், அயலாரிடம் அன்புகூருதலும் இணைபிரியாதவை.

அயலாரை நாம் தெரிந்துகொள்ளமுடியாது என்பதை இயேசு குறிப்பிட்டார். எவரை நாம் நேசிக்கவேண்டும் என்று முடிவெடுப்போமெனில்அது நமக்கு நன்றாயிருக்கும்.ஆனால் அயலாரைக் கர்த்தர் அறிவிக்கிறார்: வியாதியஸ்தர்கள், சிறையிலிருக்கிறவர்கள், கலாச்சாரம் விசுவாசம் முதலிய வற்றால் வேறுபடும் அந்நியர்கள் முதலியவர்கள். (மத்தேயு 25:35-40). அயலார் எனப்படுகிறவர்கள் தேவன் நமக்குச் சமீபமாய் குறிக்கிறவர்கள். தூரதேசங்களில் வாழ்கிற அந்நியர்களையும் உண்மையில் நாம் நேசிக்கிறோம். ஆயினும், நமது ஊர்களிலிலும் சுற்றாடல்களிலும் வாழும் நோயாளிகளையும் வறியவர்களையும் தேவன் நமக்கு அருகில் காட்டுகிறார். அவர்கள் நமக்கு அயலார்கள். தேவனைப் பிரியப்படுத்துவது எது என்பதை இப்பொழுது நாம் முடிவுசெய்யலாம்!

நமது புதிய அப்போஸ்தலிக்க விசுவாசத்தை உறுதியானதாய் நாம் காணமுடியும். யதார்த்தத்தில் தேவனே நமது அயலாரை நமக்காக தீர்மானிக்கிறார். நமக்கு சமீபமாய் தேவன் வைக் கிறவர்கள் நாம் அன்புகூரவேண்டியவர்களாகிறார்கள்.

தேவனைச் சேவிப்பதற்கு தானதர்மஞ்செய்தல் ஈடாகமுடியும் என்று சிலர் கருதுகிறார்கள். தங்கள் அயலார்களுக்கு சேவைசெய்தால் தேவனைச் சேவிக்கவேண்டியதில்லை என எண்ணுகிறார்கள். அது தவறு. விலையேறப்பெற்ற தைலத் தை இயேசுவின் பாதத்தில் மரியாள் பூசிய சம்பவத்தை அறிவோம். ஒரு சீஷன் கேட்டான்: "இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன?" ஆனால் இயேசு கூறினார்: "இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் (யோவான் 12:1-8). பிறரைச் சேவித்தல் தேவனைச் சேவித்தலுக்கு மாற்றுத்தீர்வாய் ஆவதில்லை. இரண்டும் அவசியம். இவை தேவனைப் பிரியப்படுத்தும்.

"பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்க தாக..." தேவன் பரிபூரணமானவர். அவர் மாறவோ சரி செய்து கொள்ளவோ அவசியமற்றவர். ஆனால் நாம் பரிபூரணமற்றவர்கள். தேவனுடைய பரிபூரணத்தோடு நம் மை அளந்துகொள்ளும்போது நமக்கு இன்னும் அவசியப்ப டுவதை அறியமுடியும். தேவசித்தம் என்ன, இயேசு எதை எதிர்பார்க்கிறார் என்ற கேள்வி எப்பொழுதும் நமக்கு இருக்க வேண்டும்.

இஸ்ரவேலர்களுக்கே இரட்சிப்பு என்று பேதுரு சிந்தித்தார். சமாரிரித்தில் போகாமல் இஸ்ரவேலரிடத்தில் செல்லுமாறு முதலாவதாக பேதுரு கட்டளைபெற்றார். (மத்தேயு 10:5). பிறகு புறஜாதியிரிடமும் பேதுரு செல்லவேண்டியதாகிற்று. அதற்கேற்ப் தன்னை அவர் மாற்றிக்கொண்டார். நம் சபையிலும் தொடர்ந்து தேவசித்தத்துக்கு ஏற்ப மாற்றங்கள் உருவாகின்றன. கர்த்தரை சிறப்பாய் அறிந்து நம்மை மாற் றுகிறோம். நாம் தவறாய் உபதேசித்திருக்கவில்லை, ஆயினும் தேவசித்தம் நம்மை இயக்குவதை உணர்வதால் மாற்றஞ்செய்கிறோம். மனிதராகிய நாம் தேவசித்தத்தைத் தழுவவேண்டியவர்களாகிறோம். சபைக்கு உகந்தவை ஒவ்வொருவருக்கும் உகந்தது. இவ்விதமாக ஆசீர்வாதத்தை உங்களுக்கு நான் ஆசிகூறுகிறேன்.

## அடிப்படை சிந்தனைகள்

தேவனுடனும் அயலாருடனும் நமக்குள்ள உறவு சுற்றாடலில் சம்பவிக்கிறவற்றால் பாதிப்புக்கு உள்ளாகக்கூடாது. நாம் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றபடி நம்மை மாற்றிக்கொள்கிறோம். ஆதலால் நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிறவை:

- நாம் தேவனையும் அயலாரையும் அன்புகூருகிறோம்.
- பிறரை மதிக்கிறோம், சகிக்கிறோம்.
- பரிபூரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மை சரிசெய்து, மாற்றிக்கொள்கிறோம்.




Oliver Rütten

# போதனாவிளக்கநூல் வினாவிடை வடிவத்தில்

''தன் கோட்பாட்டை மறக்கும் ஒரு சபை பலவீனமானது!'' பிரான்சின் தூலூஸ் நகரில் ஒரு தேவாராதனையில் தலைமை அப்போஸ்தலரால் கூறப்பட்ட இந்த அறிக்கையிலிருந்து, புதிய அப்போஸ்தல சபை உறுப்பினர்கள் தங்கள் கோட்பாட்டை அறிந்திருத்தலை அவர் எத்தனை பிரதானமாய் கருதுகிறார் என்பதை உணரமுடிகிறது. சபையின் கோட்பாட்டை உறுப்பினர் அறிந்துவைத்திருக்கவேண்டும் என அவர்களின் இதயத்தில் அவர் எழுதினார்.

சபையின் போதனையில் ஆழமான அறிவைக் கொண்டிருக்கிறவர்களால் மாத்திரமே மற்றவர்களுடன் அதைப் பகிர்ந்துகொள்ளமுடியும். மேலோட்டமாக கோட்பாட்டை அறிந்துவைத்திருத்தல் மட்டும் இதற்குப் போதுமானதல்ல. இதில் திடநம்பிக்கையாயிருக்கவேண்டும்!'' இந்த சூழ்நிலையில் போதனாவிளக்கநூலின் வினாவிடை வடிவத்தின் பிரசுரத்தைக் குறித்து தலைமை அப்போஸ்தலர் குறிப்பிட்டார். இது எளிதாய் நமது கோட்பாட்டை விளங்கிக்கொள்வதற்கு வழிசெய்யும். புதிய அப்போஸ்த சபையின் போதனாவிளக்கநூல் வினாவிடை வடிவத்தில் 2015ல் வெளியாகிறது.

சபையினரால் பேசப்படும் பிரதான சில மொழிகளில் 2012ல் போதனாவிளக்கநூல் பிரசுரிக்கப்பட்டது. அச்சிடப்பட்ட பதிப்புடன் மின்னணு வடிவத்திலும் இந்நூல் வெளியாகியது. இணையத்தில் படிப்பதற்கும் கிடைக்கிறதோடு, ஸ்மார்ட்போன்களில் வாசிப்பதற்கு வசதியாக ஆப்ஸ், மற்றும் டாப்லட்களிலும் கிடைக்கிறது. இவ்வாறான எல்லா பதிப்புகளும் ஒரேவிதமான உள்ளடக்கத்தையும் பிரசுரத்தையும் கொண்டிருக்கின்றன.

கற்றுக்கொடுப்பதற்கு பொருத்தமான ஒரு வடிவத்திலும்

போதனாவிளக்கநூல் வெளியிடப்படவேண்டும் என்பது தலைமை அப்போஸ்தலர் லேபர் அவர்களின் கருத்தாயிருந்தது. விளங்கிக்கொள்வதற்கு கடினமாய் தோன்றும் கருத்துக்களுக்கு சரியான விளக்கத்தைப் பெறுவதற்கு இது வசதியாயிருக்கும். இதில் உதவும்படி போதனாவிளக்கநூலின் வினாவிடை பதிப்பு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வினாவிடை பதிப்பில் போதனாவிளக்கநூலின் உள்ளடக்கத்திலிருந்து 750 வினாக்கள் பிரித்தெடுக்கப்பட்டு அவற்றிற்கான விடைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. சுலபமாக புரிந்துகொள்வதற்கு ஏதுவான அமைப்பில் உருவாகியிருக்கும் இப்பதிப்பு உலகெங்குமுள்ள ஊழியக்காரர்களுக்கு சபையின் கோட்பாட்டைக் கற்றுக்கொடுப்பதற்கும், மேலும் பல்வேறு நிலைகளில் பாடங்கள் நடத்தப்படுவதற்கும் பயன்படும்.

## எதற்காக வினாவிடை பதிப்பு?

பல்வேறு கிறிஸ்தவ சபைகளில் வினாவிடை புத்தகங்கள் ஏற்கனவே நெடுங்காலமாக போதனா விளக்கத்துக்காக உபயோகத்தில் உள்ளன. நமது சபையிலும் இது நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது. அடிப்படை போதனைகள் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. திடப்படுத்தல் பாடங்கள் கற்றுக்கொடுப்பதில் நீண்டகாலமாக நமது போதனாமுறை விளங்கிவருகிறது. இவ்விதம் வினாவிடை வடிவத்தில் நமது போதனா விளக்கநூல் சபையின் பல்வேறு நிலைகளில் பாடங்களுக்காகவும் கற்றுக்கொடுத்தலுக்காகவும் பயன்படும். இதற்கப்பால், பொதுவாக கிறிஸ்தவ கோட்பாட்டை வழங்குவதற்கு மிகவும் பொருத்தமாதாய் இது உள்ளது. நமது சபையின் கோட்பாடுகளின் அறிக்கைகள் தெளிவாய் வெளியிடும் சாத்தியத்தை இது தருகிறது.

தலைமை அப்பாஸ்தலர் லேபர் அவர்களின் ஆலோசனையின்படி, ஒரு திட்டக்குழுவின் பரீட்சார்த்த ஆராய்ச்சிக்கு முன்வைக்கப்பட்டது. மூன்று அத்தியாயங்கள் வினாவிடை வடிவத்தில் மாற்றியமைக்கப்பட்டன. திடப்படுத்தல் பாடங்களோடு இணைத்து பரீட்சிக்கப்பட்டது. இந்த பரீட்சார்த்த முயற்சி நமது சபையின் அங்கத்தவர்களின் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஆபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டது.

வாசகர்கள் உற்சாகமாய் படிக்கத்தக்கவண்ணம் குறிப்புகள் எழுத்துரு பெறுவது பெரிதும் கவனித்துக்கொள்ளப்பட்டது. ஆதலால் அநேகமான பைபிள் மேற்கோள்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. எனவே, வாசிக்கிறவர்களின் கைகளில் பைபிள் இல்லாவிடினும்கூட, வேதவாக்கியக் குறிப்புகளை நூலில் படிக்கமுடியும். குறிப்பாக, ஒரு பைபிளை வாங்கிக்கொள்ள முடியாத சூழ்நிலையில் பல்வேறு நாடுகளில் வாழக்கூடிய சகோதர சகோதரிகளுக்கு இது வசதியாய் அமைந்திருக்கிறது. இவ்விதம், உறுப்பினர்கள் நமது கோட்பாட்டில் பரிச்சயமடைவது மட்டுமல்லாமல், வேதாகம அறிக்கைகளிலும் நன்கு பரிச்சயமடைவதற்கு இது வழிசெய்கிறது.

வினாவிடை வடிவத்தில் பிரசுரிக்கப்படும் போதனா விளக்க நூலுடன் இணைந்து போதனாவிளக்கநூல் பயன்படும்படி வினாவிடைநூல் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விதம் போதனாவிளக்க வினாவிடைநூல் போதனாவிளக்கநூலை ஆழமாய் விளங்கிக்கொள்ள இணைந்து பயன்படுவதாய் உதவும். அதன்மூலம் போதனாவிளக்கநூலை தனிப்பட்ட ஒவ்வொருவரும் படிப்பதில் நன்கு விளங்கிக்கொள்ளமுடியும்.


தெளிவையும் கிரகித்தலையும் விசாலமான சாத்தியத்தில் வழங்குவதே இந்நூலின் ஆக்கத்தின் பிரதான காரணமாய் இருக்கிறது. இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக வித்தியாசமான முறைகளும் கிரமங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- ஒன்றின்மேல் ஒன்றாய் இணைத்துக் கட்டப்பட்டிருப்பதாக அமைந்திருக்கும் 750 கேள்விகளும் பதில்களும், வாசகர்களை போதனாவிளக்கநூலின் உள்ளடக்கத்திற்குள் கைபிடித்து அழைத்துச் செல்வதைப்போல் அமைந்திருக்கிறது.
- சில நேரங்களில் புரிந்துகொள்வதற்குக் கடினமான சிக்கலை உண்டுபண்ணக்கூடிய விஷயங்களை வாசகர்கள் கிரகித்துக்கொள்வதற்காக, ஏராளமான தனிப்பட்ட கேள்விகளும் விடைகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.
- வாக்கியங்கள் நினைவில் நிற்கும்படியாக எளிமையாய் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- உபதேசக் கோட்பாடுகளை அளவுக்கு அதிகமாய் விவரிக்கும் முறைகள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.
- சில சொற்களைப் பொறுத்தவரையில் விளக்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன அல்லது, ஏற்கனவே போதனாவிளக்கநூலில் உள்ள கருத்துக்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

வாசகர்கள் இதமாகப் படித்தறியக்கூடிய இயல்பில் எடுத்துக்காட்டுகள் நூலில் குறிப்பிடப்படுகின்றன. எனவே ஆர்வமாய் வாசிப்பதற்கான உற்சாகத்தை இது கொண்டுவருகிறது.

வினாவிடை வடிவத்தில் வெளிவரும் போதனா விளக்கநூலின் ஆக்கத்தை உன்னிப்பாக கவனித்தவரான தலைமை அப்போஸ்தலர் ஜோன்-லூக் ஷ்னைடர் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார்: போதனாவிளக்க நூலைப்போலவே இந்நூலும் சபையினர் தங்கள் விசுவாசத்தை ஆழமாய் விருத்திசெய்ய உதவுகிறது. விருப்பமுள்ள மற்றவர்கள் புதிய அப்போஸ்தல சபையை நன்கு அறிந்துகொள்வதற்கும் இது சந்தர்ப்பமளிக்கிறது.

Imprint
Publisher: Jean-Luc Schneider,
Überlandstrasse 243, CH-8051 Zurich, Switzerland
Verlag Friedrich Bischoff GmbH
Gutleutstrasse 298, 60327 Frankfurt/Main, Germany
Editor: Peter Johanning



Oliver Rütten

# அத்தியாயம் 1: தேவனுடைய வெளிப்பாடுகள்

நீதிபோதனைக்குரிய ஒரு கிரமமான முறையில் புதிய அப்போஸ்தல சபையின் போதனாவிளக்க வினாவிடைநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. 750 கேள்விகளுக்கும் விடைகளுக்கும் வாசகர்கள் கைப்பிடித்து அழைத்துச் செல்லப்படுகிறார்கள். சுலபமாய் விளங்கிக்கொள்ளத்தக்கதாக ஒவ்வொரு அறிக்கையும் அமைந்திருக்கிறது.

தேவன்மேல் நமக்குள்ள விசுவாசத்தின் ஆதாரம் எது?
தேவனே நமது விசுவாசத்தின் ஆதாரமாயிருக்கிறார். மனிதர் அவரை அறிந்துகொள்ள அவர் அனுமதிக்கிறார்: அவர் தம்மை "வெளிப்படுத்துகிறார்." தேவன் இருக்கிறார் என்னும் அறிவு தேவனாலேயே தரப்படுகிறது. தேவன் தம்மை மறைத்துக்கொள்வதில்லை. மனிதர் அவரைப்பற்றிப் பேசவும், அவரை விசுவாசிக்கவும் ஏற்றபடி அவர்கள் அவரை அறிந்துகொள்ள அனுமதிக்கிறார்.

"தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்கு சொல்ல இடமில்லை. (ரோமர் 1:19-20)

தேவன் எவ்வாறு தம்மை வெளிப்படுத்துகிறார்?
இயற்கையிலும் வரலாற்றிலும் வித்தியாசமான வழிகளில் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார்.

"தம்முடைய மேல்வீடுகளிலிருந்து பர்வதங்களுக்குத் தண்ணீர் இறைக்கிறார்; உமது கிரியைகளின் பலனாலே பூமி திருப்தியாயிருக்கிறது. பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, அவர் மிருகங்களுக்குப் புல்லையும், மனுஷருக்கு உபயோகமான பயிர்வகைகளையும் முளைப்பிக்கிறார்."(சங்கீதம் 104:13-14)

தேவன் எவ்வாறு தம்மை அடையாளப்படுத்துகிறார்?
தேவன் ஆவியானவர். தம்மை அவர் பின்வருமாறு அடையாளப்படுத்துகிறார்: தேவனாகிய,

- பிதா, சிருஷ்டிகளின் சிருஷ்டிகர்த்தாவும் போஷகரும் (ஆதியாகமம் 1:8, 21-22).
- குமாரன், மீட்பரும் இரட்சிப்பு கொண்டுவருகிறவரும் (1 யோவான் 5:20).
- பரிசுத்தஆவி, தேற்றரவாளனும் சகாயரும், சகல சத்தியத் தில் நடத்துகிறவரும் (யோவான் 16:13).

தேவனுடைய வெளிப்பாடுகள் எங்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன?
தேவனுடைய வெளிப்பாடுகள் பரிசுத்த வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. "தேவனுடைய வெளிப்பாடுகள்" என்பதை பல்வேறு வழிகளில் நாம் விளங்கிக்கொள்கிறோம்.:

- தம்மை அறிந்துகொள்ளும்படி தேவன் எப்பொழுதும் அனுமதிக்கிறார். அவருடைய இருப்பிலும், சுபாவத்திலும் உட்பார்வையை அவர் வழங்குகிறார் (தேவனுடைய சுயவெளிப்பாடு).
- தமது சித்தத்தை மனிதர் அறியும்படிச் செய்கிறார்
- தமது அன்பிலும், குறிப்பாக தமது வார்த்தையிலும் தேவசடங்குகளிலும் மனிதரை தேவன் சந்திக்கிறார்.

தேவனுடைய கிரியைகளில் வேறு உட்பார்வைகள் உண்டா?
ஆம், அப்போஸ்தல ஊழியத்தில் பரிசுத்தஆவியின் செயற்பாட்டின்மூலம், மனிதஇனத்தின் இரட்சிப்பிற்காக அவர் நடத்தும் கிரியைகளில் உட்பார்வையை தேவன் நமக்கு வழங்குகிறார். வேதாகமத்தில் இவை குறிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், பரிசுத்தஆவியினால் வெளிப்படுத்தப்படுகின்றன.

தேவனுடைய வெளிப்பாடுகளை மதிக்கும்வண்ணம் மனிதர் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்?
தேவனையும் அவருடைய வெளிப்பாடுகளையும் மனிதர்கள் விசுவாசிக்கவேண்டும். தேவனுடைய வெளிப்பாடுகளை விசுவாசத்தின் மூலமாக மட்டுமே மனிதர்கள் பற்றிக்கொள்ளமுடியும். அவர்கள் விசுவாசிப்பார்களெனில், திவ்விய காரியங்கள் அவர்களுக்கு பெறுமதியுள்ளதாய் இருக்கும்; தங்கள் வாழ்வை அவர்கள் நெறிப்படுத்திக்கொள்வார்கள். சிருஷ்டிகராக தேவனை விசுவாசிக்காதவர்களால் தேவனுடைய சிருஷ்டிப்பாக பிரபஞ்சத்தைக் காணமுடிவதில்லை என்று உதாரணமாக குறிப்பிடலாம். அப்படிப்பட்டவர்கள் இயற்கையின் வனப்பை யதேச்சையான அபிவிருத்தி எனக் கூறுவார்கள்.

மனிதர்கள் எவ்வாறு விசுவாசிக்க முன்வருகிறார்கள்?
பரிசுத்தஆவியினால் விசுவாசம் வழங்கப்பட்டு வலுப்படுத்தப்படுகிறது. மற்ற காரியங்களுக்கு நடுவிலும், பரிசுத்த வேதாகமத்தின் அஸ்திவாரத்தின்மேல் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதன்மூலம் விசுவாசம் வருகிறது.
"விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." (ரோமர் 10:17)

பரிசுத்த வேதாகமம் என்றால் என்ன?
தேவனுடைய கிரியைகள், வாக்குத்தத்தங்கள், கட்டளைகள் குறித்து எழுதப்பட்டவைகளின் சேகரிப்பு பரிசுத்த வேதா கமம் -பைபிள்- என்று வழங்கப்படுகிறது. பழைய ஏற் பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் அது உள்ளடக்குகிறது. பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடுகளை அறிவிக்கிறது. எவ்வாறாயினும், தேவனுடயை சகல பூரண செயற்பாடுகளையும் உள்ளடக்கியிருப்பதில்லை. மனித இனத்தின் இரட்சிப்பிற்காக பதிவுசெய்யப்படவேண்டியவைகளை தேவனே நிர்ணயித்தார்.

லத்தீன் மொழியில் பிபிலியா என்னும் சொல்லிலிருந்து பைபிள் என்னும் சொல் உருவானது. இதற்கு "புத்தகங்கள், சுருள்கள்" என்று பொருள்படும்.

பரிசுத்த வேதாகமத்தின் ஆக்கியோன் யார்?
பரிசுத்த வேதாகமத்தின் ஆக்கியோன் தேவனே. இதற்கென பரிசுத்தஆவியினால் தூண்டப்பட்டவர்கள் தேவனால் வெளிப்படுத்தப்பட்டவைகளை எழுதினார்கள். இசைவும் விவரமுமான முறையில் எழுதப்பட்டவைகள், அவற்றை எழுதியவர்களின் சுவடுகளை வெளிப்படுத்துவதாகவும், அவர்களின் காலத்து சூழ்நிலைகளைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்தன.

வேதாகம புத்தகங்களின் வாக்கியங்கள் ஒரு சரியான பொறுப்புள்ள தன்மையில் அர்ப்பணிக்கப்பட்டதா?
ஆம், பல நூற்றாண்டுகளாக பைபிள் நூல்கள் மாசற்றதாக நிலைத்திருக்கும்படி தேவன் பார்த்துக்கொண்டார்.

வேதாகம நூல்கள் எவ்வாறு ஒன்றாய் சேகரிக்கப்பட்டன?
பல நூற்றாண்டுகளாக வேதாகம நூல்கள் சேகரிக்கப்பட்டன. இது மனிதனுடைய தியானத்தினால் மட்டுமல்ல, குறிப்பாக தேவனுடைய சித்தத்தின்மூலமாகவும் நடந்தேறியது. பழைய ஏற்பாட்டின் கிறிஸ்தவ தத்துவமானது, யூதத்துவத்தின் எபிரெய தத்துவத்தை அடிப்படையாய்க் கொண்டிருக்கிறது. சுமார் 1000 வருடங்கள் கொண்ட ஒரு காலகட்டத்தில் எழுதிமுடிக்கப்பட்டவை என்று ஊகிக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டின் அடிப்படைத் தத்துவம் சுவிசேஷகங்களையும், அப்போஸ்தலர்களின் நடபடிகளையும், அப்போஸ்தலர்களின் நிருபங்களையும், இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாகிய தீர்க்கதரிசன புத்தகத்தையும் உள்ளடக்கியிருக்கின்றது. ஆதிசபையின் பெருமதிப்பை அப்போஸ்தலன் பவுல் எழுதியவைகளே முதலாவதாய் பெற்றுக்கொண்டதாக கருதப்படுகிறது. சுவிசேஷகங்கள், -அவற்றில் மாற்கு சுவிசேஷமே பழைமையானதாய் கருதப்படுகிறது- மற்றும் எழுதப்பட்டவைகள் யாவும் அதன்பிறகு சேர்க்கப்பட்டவை. புதிய ஏற்பாடு சுமார் 70 ஆண்டுகள் காலகட்டத்தில் எழுதிமுடிக்கப்பட்டது. கிறிஸ்தவ விசுவாசத்தின் இந்த அசலான விவரங்கள் காத்துக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்காக, இது ஒரு தொகுப்பாய் திரட்டிச் சேர்க்கப்பட்டது. முடிவில், கிறிஸ்தவ தத்துவ அடிப்படை நூலாக மதத்தலைவர்களின் மேலான வேதசபையினால் அங்கிகரிக்கப்பட்டது.